செ.வெ.எண்: 30 நாள்: 17.03.2020

**கரூர் மாவட்டம்**

**தொழிற்சாலைகளை துய்மையாக பராமரிக்க வேண்டும் - பணிபுரியும் நபர்கள்கள் சுத்தமாக கைகழுவியபிறகே அனுமதிக்க வேண்டும் - கொரனோ தொற்று குறித்த சந்தேககங்ளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்களை தொடர்புகொள்ளலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

கொரோனோ வைரஸ் தடுப்பு நடவடிகைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கரூர் மாவட்டத்தில் உள்ள ஆயத்த ஆடை நிறுவனங்கள் மற்றும் பெட்ரோல் பங்குகளின் உரிமையாகளர்களுடானான கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.03.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தற்போது அனைவரையும் அச்சுறுத்தி வருவது கொரனோ எனப்படும் வைரஸ். இந்த வைரசானது காற்றில் பரவக்கூடியது அல்ல. மாறாக தொடுதலால் பரவக்கூடியதாகும். பல்வேறு நாடுகளில் **நாவல் கொரோனோ** வைரஸ் பரவி வருகிறது. உலக சுகாதார நிறுவனம் இதை தொற்று நோயாக அறிவித்துள்ளது. அதனால் அந்த வைரஸ் பரவாமல் இருக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்ககைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் என்பது மனிதர்களுக்கு காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத்திணறல் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய ஒருவகை வைரஸ் கிருமியாகும். சீனாவின் வூகான் நகரத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டு தற்போது பல நாடுகளுக்கு பரவியுள்ளது.

காய்ச்சல், சளி, தொடர் இருமல், உடல் சோர்வு, ஒரு சிலருக்கு மூச்சுத்திணறல் ஆகியவை இந்நோயின் அறிகுறிகள். இந்நோய் அறிகுறிகள் உள்ள நபர் இருமும் போதும், தும்மும் போதும், வெளிப்படும் நீர்த்திவலைகள் மூலம் மனிதரிடமிருந்து மனிதருக்கு நேரடியாக பரவுகிறது. மேலும் இருமல் மற்றும் தும்மல் மூலம் வெளிப்படும் கிருமிகளை உடைய நீர்த்திவலைகள் படிந்துள்ள பொருட்களை தொடும்பொழுது கைகள் மூலமாக நோய்த்தொற்று ஏற்படுகின்றது. அவ்வாறு நோய்தொற்றியுள்ள கைகளால் கண், மூக்கு, வாய் இவற்றை தொடும்போது நோய்க்கிருமிகள் உடலுக்குள் செல்கின்றன. எனவே கொரோனா வைரஸ் நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்க அடிக்கடி கைகளை சோப்பு போட்டு நன்கு தேய்த்து கழுவ வேண்டும். ஒவ்வொரு முறையும் கை கழுவ குறைந்த பட்சம் 30 விநாடிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நமது கரூர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் ஆயத்த ஆடைகள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. எனவே, கொரோனா பாதிப்புள்ள நாடுகளில் இருந்து விற்பனை பிரதிநிதிகள் தங்கள் நிறுவனத்திற்கு வருவதையும், தங்கள் நிறுவனத்தின் சார்பில் பிரதிநிதிகள் வெளிநாட்டிற்கும் செல்வதை தவிர்க்க வேண்டும். மேலும், தங்கள் நிறுவனத்தில் ஏராளமான நபர்கள் பணிபுரிவார்கள். அவர்களுக்கு கொரோனா வைரஸ் குறித்த புரிதலை ஏற்படுத்த வேண்டும். இந்த வைரஸ் குறித்து யாரும் அச்சம் கொள்ளவோ, பீதியடையவோ வேண்டாம். நம்மை நாம் தூய்மையாக வைத்துக்கொண்டால் போதும்.

தொழிற்சாலைகளுக்குள் வரும்போதும், தொழிற்சாலையை விட்டுச் செல்லும்போதும் முறையாக கிருமி நாசினிகளைக்கொண்டு கைகளை நன்கு கழுவியபிறகே செல்ல வேண்டும். இதை அனைத்து நிறுவனங்களிலும் பின்பற்ற வேண்டம். அதுமட்டுமல்லாது தொழிற்சாலைகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும். தரைகளை கிருமிநாசினிகள் கொண்டு துடைக்க வேண்டும். 1 கிலோ பிளீச்சிங் பவுடருடன் 49 லிட்டர் தண்ணீரை நன்கு கலக்கி, தெளிந்த பின்னர் மேல்இருக்கும் தண்ணீரை கிருமி நாசினியாக தரைகளை கழுவ பயன்படுத்தலாம்.

பணியாளர்களுக்கு சலி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்களை அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு அழைத்துச்சென்று பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். மேலும், தெர்மல் ஸ்கேனர் மூலம் உங்கள் பணியாளர்களை பரிசோதனைக்கு உட்படுத்தலாம்.

தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்படும் பேருந்துகள், தொழிற்சாலை வளாககங்கள் ஆகியவற்றில் கிருமி நாசினிகள் தெளிக்கப்படவேண்டும். பணம் கொடுக்கும்போதும், வாங்கும்போதும் கைகளை நன்கு கழுவிய பிறகே மேற்கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் ஒருவரது உடலில் வந்து பாதிப்பை ஏற்படுத்துவதற்கு அடிப்படை காரணம் அவரது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளதே ஆகும். எனவே, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகளை அனைவரும் உட்கொள்ள வேண்டும். நிலவேம்பு கசாயம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என்ற தகவலை அனைவருக்கும் எடுத்துக்கூறுங்கள்.

கொரோனா குறித்த சந்தேகங்களுக்கு 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியிலும், 04324-255340 என்ற ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு பிரிவிற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை 04324-256306 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா தொற்றை கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் 1,069 பள்ளிகளும், 18 கலை அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளும், 165 மதுபான பார்களும், 13 திரையரங்குகளும், 1,052 அங்கன்வாடி மையங்களும் 31.03.2020 வரை மூடப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கான உணவுப்பொருட்களை அவர்களின் குடும்பத்தாரிடம் அங்கன்வாடி மைய பணியாளர்கள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பேருந்து நிலையங்கள், இரயில் நிலையம், அனைத்து மத ஆலயங்கள் என பொதுமக்கள் கூடு வாய்ப்புள்ள பகுதிகளில் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு, கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கொரோனா வைரஸ் நோயை தடுப்பதற்கான முயற்சிகளை ஒவ்வொரு தனிமனிதனும் சுயமாக உணர்ந்து முழுமையாக மேற்கொண்டு தமிழ அரசு எடுத்துவரும் நோய் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி.செல்வசுரபி, சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு. செல்வகுமார், தொழிலாளர் நல உதவி ஆணையர் திருமதி.கிருஷ்ணவேணி, நகர்நல அலுவலர் மரு.பிரியா உள்ளிட்ட அலுவலர்கள், ஆயத்த ஆடைந நிறுவனங்களின் உரிமையாளர்கள், சங்கங்களின் பிரதிநிதிகள், பெட்ரோல் பங்குகளின் உரிமையாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.